**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 156/2018** பி. வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சசாதேவன் | **வயது** | : | 63 |
| **த.பெ** | : | கேவிந்தசாமி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | பால்வா'ர்த்து வென்றான் | **தொழில்** | : | சத்துணவு அமைப்பாளர் (ஓய்வு) |

**<u>18.02.2026 – பி.வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எப்படி எனக்கு பாத்தியப்பட்டது என்றால் அது என் பூர்வீக சொத்துக்கள் ஆகும். என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 6 பேர்கள் ஆவார்கள். என் தந்தை உயில் பத்திரம் அவரின் மகன்கள் 5 பேருக்கும் ஒரே உயிலில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் பத்திரத்தில் என் தந்தை தனிதனியாக அட்டவணை சொத்துக்களை காண்பித்து 5 மகன்களுக்கும் எழுதிவைத்துள்ளார். உயில் எழுதுவதற்கு முன்னால் யார் அனுபவித்திருந்தார்கள் என்றால் தாவா சொத்துக்களை என் தந்தை மற்றும் என் சகோதரர்கள் அனுபவித்துவந்தார்கள், நான் வேலை சம்மந்தமாக என் ஊரிலும் மற்ற ஊரிலும் இருந்ததாலும் நான் தாவாசொத்துக்களை அனுபவிக்கவில்லை.

2)என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-2 முன்னிலைக்கு சர்வே நெம்பர் 14/5 ல் தாவா கிணறு, பம்புசெட் வாதிக்கும் எனக்கும் மற்றும் என் சகோதரர் முனுசாமிக்கும் உயில் பிரகாரம் எங்கள் 3 பேருக்கும் எழுதிவைக்கப்பட்டுள்ளது என்றால் உயில் பிரகாரம் நான் மேற்படி உயில் மூலம் எனக்கு வந்த சொத்தை நான் அனுபவிக்கவில்லை. மேலும், உயிலுக்கு முன்பும் பின்பும் மேற்படி சர்வே நெம்பர் 14/5 ல் உள்ள கிணற்றிலிருந்து எந்த சொத்திற்கு கால்வாய் செல்கிறது என்று நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-2 உயில்படி சர்வே நெம்பர் 14/5 ல் தான் எனக்கு கிணறு 1/3 பாகம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எந்த சர்வே நெம்பரில் தற்போது வீடு கட்டியுள்ளேன் என்றால் சர்வே நெம்பர் 14/5 ல் வீடு கட்டியுள்ளேன்.

3)எனக்கு வா.சா.ஆ-2 உயிலின்படி சர்வே நெம்பர் 14/5 ல் கிணறு 1/3 பாகம் மட்டும் தான் உள்ளது வேறு சொத்தில் பாகம் எதுவும் இல்லை என்றால் சர்வே நெம்பர் 14/5 ல் 36 செண்டில் 6 செண்ட் என்று எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் மூலம் வழக்கறிஞர் ஆணையர் தாவாசொத்துக்களை அளக்க வரும்போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் கால்வாய் செல்வதாக அவரின் அறிக்கையில் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் கால்வாய் இல்லை. சர்வே நெம்பர் 14/5 ல் முதலில் வாதிக்கு 6 செண்டும், எனக்கு 6 செண்டும், என் சகோதரர் முனுசாமிக்கு 26 செண்டும், உயில்மூலம் கிடைக்கபெற்றது என்றால்

சரிதான். சர்வே நெம்பர் 14/3 எப் -ல் உள்ள கிணற்றிலிருந்து சர்வே நெம்பர் 14/5 ல் உள்ள முனுசாமி நிலத்திற்கு தண்ணீர் எப்படி செல்கிறது என்றால் எனக்கு தெரியாது.

4)சர்வே நெம்பர் 14/5 ஐ தாண்டி வாதிக்கும் எனக்கும் சர்வே நெம்பர் 14/6 ல் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படிசர்வே நெம்பர் 14/6 நிலத்திற்கு சர்வே நெம்பர் 14/3 எப் கிணற்றிலிருந்து தண்ணீர் செல்லவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவாசொத்துக்களில் தென்னை மரங்கள் எத்தனை பாகம் எனக்கு உள்ளது என்றால் தென்னைமரங்கள் அங்கு இல்லை. வா.சா.ஆ-2 உயிலில் மரவகையறாவில் எனக்கு 1/3 பாகம் உள்ளதாக என் தந்தை எழுதியுள்ளார் என்றால் அது பொய்யாக எழுதியுள்ளார். முனுசாமிக்கு உயில் மூலம் பாகம் வந்த சொத்துக்களை வாதி பெற்றுவிட்டாரா என்றால் எனக்கு தெரியாது. முனுசாமி மற்றும் வாதி சுப்பரமணி பொதுகால்வாயிலிருந்து தண்ணீர் இறைப்பாரா என்றால் எனக்கு தெரியாது, நான் தாவா சொத்துக்களுக்கு சென்று பார்த்ததில்லை.

5)வா.சா.ஆ-2 உயிலின் பிரகாரம் தான் நானும், முனுசாமி மற்றும் வாதியும் அனுபவித்து வருகிறோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே நெம்பர் 14/3 எப் கிணற்றிலிருந்து வாதியும், முனுசாமியும் காலகாலமாக பொதுகால்வாய் செல்கிறது என்றால் கால்வாய் இல்லை. வாதி மற்றும் முனுசாமி எப்படிகிணற்றிலிருந்து தண்ணீர் இரைக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது, நான் நிலங்களை சென்று பார்த்ததில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வே நெம்பர் 14/6 ல் வாதிக்கும் எனக்கும் தலா 20 செண்ட் உயில்மூலம் ஒதுக்கப்பட்ட நிலையில், பொதுகால்வாயை கழித்துவிட்டு வாதிக்கும் எனக்கும் தலா 19 செண்ட் தான் சர்வே நெமபர் 14/6 ல் உள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

6)அண்ணன் தம்பி சொத்துக்களில் பொதுகால்வாய் என்று பத்திரத்தில் எழுதிகொடுக்கமாட்டார், ஆகையால் அனுபவத்தின்பேரில் பொதுகால்வாய் அங்கு உள்ளது என்றால் சரியல்ல. எனக்கும், சுப்பிரமணிக்கும் பிரச்சனை உள்ளதால் தாவாசொத்துக்களில் பொதுகால்வாய் இல்லை என்று நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER Digitally signed by SALMA BASEER Date: 2026.02.19 10:43:28 +0530

District Munsif,
Polur.